# TAMIL NOVELS OF EASTERN PART OF SRI LANKA

## SOCIO, POLITICAL VIEW

MOHAMED ABDUL SATHAR MOHAMED FIRTHOWS
REG. NO. 2009/AC/PHD/03

24 NOV 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

PhD11
Thesis
Library - EUSL

Thesis submitted to the Department of Languages, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka for the award of the degree of Doctor of Philosophy in Tamil.

July, 2014.

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்


நன்றியுரை

முகவுரை (i - v)

**இயல் – 01 : இலக்கிய மீளாய்வு (1 – 22)**

1.1. ஈழத்தில் வெளிவந்த தமிழ் நாவல் பற்றிய பொதுவான ஆய்வு நூல்கள் 1 - 6

1.2. ஈழத்து தமிழ் நாவல்கள் பற்றிய முழுமையான ஆய்வு நூல்கள் 7 - 12

1.3. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் ஈழத்து தமிழ் நாவல் வரலாறு. 12 - 14

1.4. இலக்கிய ஆய்வுத் தொகுப்புகளில் வெளிவந்த ஈழத்து நாவல்கள் பற்றிய கட்டுரைகள், விமர்சனங்கள் 15 - 17

1.5. சஞ்சிகைகளில் வெளிவந்த நாவல்கள் பற்றிய கட்டுரைகள் 17 - 18

1.6. பல்கலைக்கழக முதுநிலைப் பட்டங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு நூல்வடிவில் வெளிவராத ஆய்வேடுகள் 18 - 19

1.7. கிழக்கிலங்கைத் தமிழ் நாவல் பற்றிய ஆய்வின் அவசியம் 19 - 22

**இயல் – 02 : 1950 – 1980 வரையான காலகட்டத்தில் தோன்றிய நாவல்கள் (23 – 100)**

2.1. அறிமுகம் 23 - 27

2.2. இலக்கிய இயக்கங்கள் 27 - 30

2.3. பத்திரிகைகளின் பணி 30 - 32

2.4. இலக்கிய சஞ்சிகைகளின் பணி 32 - 34

2.5. கையெழுத்துப் பிர்திகள் 34

2.6. கிழக்கிலங்கையின் முதல் நாவல்கள் 35 - 36

2.6.1. ஊசோன் பாலந்தை கதை 36 - 37

2.6.2. மோகனாங்கி 37 - 42

2.6.3. அரங்கநாயகி 43 - 45

2.7. 1950 - 1980 வரையான நாவல்களும் அவற்றின் வகைகளும் 45

2.7.1. சமூக உணர்வு நாவல்கள் 46 - 60

2.7.2. வரலாற்று நாவல்கள் 60 - 67


24 NOV 2017 EASTERN UNIVERSITY, SRI LANKA

2.7.3. மர்ம நாவல்கள் 67 - 71

2.7.4. தேசிய ஒருமைப்பாட்டு நாவல்கள் 71 - 74

2.7.5. அரசியல் நாவல்கள் 74 - 76

2.8. 1950 - 1980 வரை எழுந்த நாவல்களில் சமூக நிலை 76 - 90

2.9. 1950 - 1980 வரை எழுந்த நாவல்களில் அரசியல் நிலை 91 - 95

மதிப்பீடு 96 - 100

**இயல் – 03 : 1980 களில் எழுந்த நாவல்கள் (101 – 152)**

3.1. சமூக அரசியற் போக்குகள் 101 - 104

3.2. இலக்கியப் போக்குகள் 104 - 105

3.3. 1980 களில் வெளிவந்த நாவல்களும் அவற்றின் வகைகளும் 106 - 107

3.3.1. சமூக உணர்வு நாவல்கள் 107 - 117

3.3.2. வரலாற்று நாவல்கள் 117 - 119

3.3.3. அரசியல் நாவல்கள் 119 - 121

3.3.4. மொழிபெயர்ப்பு நாவல்கள் 121 - 122

3.3.5. புலம்பெயர் நாவல்கள் 122 - 126

3.4. 1980 களில் வெளிவந்த நாவல்களில் சமூக நிலை 127 - 140

3.5. 1980 களில் வெளிவந்த நாவல்களில் அரசியல் நிலை 141 - 147

மதிப்பீடு 148 - 152

24 NOV 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

**இயல் – 04 : 1990 களில் வெளிவந்த நாவல்கள் (153 – 208)**

4.1. சமூக அரசியற் போக்குகள் 153 - 157

4.2. இலக்கியப் போக்குகள் 158 - 161

4.3. 1990 களில் வெளிவந்த நாவல்களும் அவற்றின் வகைகளும் 161 - 162

4.3.1. சமூக உணர்வு நாவல்கள் 163 - 168

4.3.2. தேசிய உணர்வு நாவல்கள் 168 - 171

4.3.3. அரசியல் நாவல்கள் 171 - 177

4.3.4. புலம்பெயர் நாவல்கள் 177 - 186

4.4. 1990 களில் வெளிவந்த நாவல்களில் சமூக நிலை 186 - 196

4.5. 1990 களில் வெளிவந்த நாவல்களில் அரசியல் நிலை 196 - 203

மதிப்பீடு 204 - 208

**இயல் – 05 : 2000 – 2010 காலப்பகுதியில் எழுந்த நாவல்கள் (209 – 278)**

5.1. சமூக அரசியற் போக்குகள் 209 - 213

5.2. இலக்கியப் போக்குகள் 213 - 216

5.3. 2000 - 2010 காலப்பகுதியில் வெளிவந்த நாவல்களும் 217 - 218

அவற்றின் வகைகளும் 217 - 218

5.3.1. சமூக உணர்வு நாவல்கள் 218 - 228

5.3.2. வரலாற்று நாவல்கள் 229 - 231

5.3.3. சமூக வரலாற்று நாவல்கள் 231 - 234

5.3.4. போர்ச் சூழல் பற்றிய நாவல்கள் 235 - 241

5.3.5. புலம்பெயர் நாவல்கள் 241 - 248

5.3.6. சிறுவர் நாவல்கள் 248 - 251

5.4. 2000 - 2010 காலப்பகுதியில் வெளிவந்த நாவல்களில் சமூக நிலை 252 - 258

5.5. 2000 - 2010 காலப்பகுதியில் வெளிவந்த நாவல்களில் அரசியல் நிலை 258 - 272

மதிப்பீடு 273 - 278

**இயல் – 06 : கிழக்கிலங்கைத் தமிழ் நாவல்களும் மொழிநடையும் (279 – 317)**

6.1. கதை மாந்தர் உரையாடல் 279 - 294

6.2. சொற்களும் சொற்றொடர்களும் 294 - 303

6.3. சம்பவ விபரிப்புகளும் வர்ணனைகளும் 303 - 307

6.4. கதை நகர்த்து முறைகள் 307 - 316

மதிப்பீடு 317

**இயல் – 07 தொகுப்பும் மதிப்பீடும் (318 – 329)**

LIBRARY
24 NOV 2017

# ஆய்வின் உள்ளடக்கம்

இவ்வாய்வானது ஏழு இயல்களையும், இறுதியில் உசாத்துணைநூல் பட்டியல், மூலநூல் பட்டியல், கிழக்கிலங்கை நாவல்களின் முகப்புப் பக்கங்கள் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இதன் முதலாவது இயலான இலக்கிய மீளாய்வு இற்றை வரைக்கும் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற தமிழ்நாவல் ஆய்வு முயற்சி பற்றியும், அவை எழுந்துள்ள நோக்கங்கள், அவற்றில் கிழக்கிலங்கையைச் சேர்ந்த தமிழ் நாவலாசிரியர்களின் படைப்புகள் எந்தளவிற்கு எப்படி ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன என்பது பற்றியும், அவை எதிர்கொண்ட பிரச்சினைகளையும் எடுத்துக் காட்டுகிறது.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டைத்தாண்டி நிற்கும் கிழக்கிலங்கைத் தமிழ் நாவல் படைப்புக்களை, அவை எழுந்துள்ள காலகட்ட அடிப்படையில் வகைப்படுத்தி நோக்கவேண்டியிருப்பதால், அதற்கு வசதியாக இரண்டு முதல் ஐந்து வரையான நான்கு இயல்களும் சமூக அரசியலை மையப்படுத்தியதாய் பிரிக்கப்பட்டுள்ளன.

வீரசாகசம், வரலாறு, மர்மம் என உப கதைகள் சொல்லும் பாங்கில் தோன்றியிருந்த கிழக்கு நாவல்கள் 1950 களில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் வேறுபட்டு நிற்கிறது. பேரினவாத மேலாதிக்கத்திற்கெதிரான சிறுபான்மையினரின் எதிர்ப்புணர்வுகளை காட்டும் வகையிலும் சமூக, அரசியல் பிரச்சினைகளின் தாக்க உணர்வினை வெளிக்காட்டும் தன்மையிலும் பிரச்சாரத் தொனியுடனும் 1980 வரை நீடித்திருந்தன. அவ்வகையில் இக்காலகட்டத்து சமூக அரசியலை நாவல்களில் நோக்குமுகமாக 1950 தொடக்கம் 1980 வரையான காலகட்டம் ஒரு பிரிப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

மார்க்சீய ஈர்ப்பினால் உண்டான வர்க்கப்போராட்ட நோக்குநிலையிலிருந்தும் ஒருபடி மேலே சென்று 1980 களில் மிகைத்திருந்த இனமுரண்பாட்டு அரசியல், சாத்வீகப் போராட்டங்களில் அறவே நம்பிக்கையிழந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடத் தலைப்பட்ட நிலை, இயக்கங்களின் பயிற்சி நடவடிக்கைகள் என்பவற்றையும் இவற்றின் தாக்கத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட புதிய வாழ்க்கை அனுபவங்களையும் எடுத்துக்காட்டுவதாக 1980 களில் வெளிவந்த நாவல்கள் அமைந்திருந்தபடியினால் 1980 கள் காலகட்டம் தனிப்பிரிவாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசியப் போராட்டமானது நேரடிப் போர்முறையாக மாறிய தன்மை, வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவல், சமூக இடப்பெயர்வு, புலப்பெயர்வு, அகதிக முகாம் வாழ்வு என 1990 கள் காலகட்ட அரசியல், சமூக நிலையினை இக்காலகட்ட நாவல்கள் பேசுபொருளாகச் சேர்த்துக்கொண்ட தன்மையை நோக்கும் வகையில் 1990 கள் காலகட்டம் அடுத்த பிரிவாக பார்க்கப்படுகிறது.

சமாதான உடன்பாடுகளும், சமூக முரண்பாட்டைத் தணித்தலுக்குமான பேச்சுவார்த்தை முயற்சிகளும் 2000 கள் காலகட்ட நடுப்பகுதி வரை ஏற்பட்டிருந்த போதும் அம்முயற்சிகள் கைகூடாத நிலையில் நான்காம் கட்ட ஈழப்போர் நடைபெற்று முடிந்தது. அதற்குள் புலம்பெயர் வாழ்வின் நோதலும், நவீன வாசிப்பும், நூல்களின் தரிசிப்பும் விரிவுகொள்ளவே முன்னைய காலங்களை விட அதிக எண்ணிக்கையிலான நாவல்களைக் கிழக்கில் சந்திக்க முடிகிறது. அவை 2000 கள் காலப்பகுதி நிகழ்வுகளை அதிகம் பிரதிபலிக்க முயன்றிருக்கின்ற

காரணத்தினால் 2000 தொடக்கம் 2010 ஐ உள்ளடக்கிய காலப்பிரிப்பு இறுதியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இவற்றிற்கிணங்க 1950 - 1980 வரையான காலகட்டத்தில் தோன்றிய நாவல்கள் என்ற இரண்டாவது இயலானது கிழக்கில் நாவலின் தோற்றக் காலம் முதல் 1980 வரையான காலப்பகுதிக்குள் எழுந்துள்ள நாவல்களை அக்காலகட்ட சூழ்நிலையோடு எடுத்துக்காட்டி, அவைகொண்ட பொருளின் அடிப்படையில் வகைமைப்படுத்தி நோக்கிய பின்னர் அவற்றிலிருந்து வெளிப்படும் சமூக, அரசியல் நிலைகளை எடுத்துக் காட்டுகிறது.

மூன்றாம் இயல் 1980களில் எழுந்த நாவல்களையும் அவற்றின் சமூக, அரசியல், இலக்கியப் போக்கினையும் எடுத்துக் காட்ட, அதே பாங்கில் நான்காம் இயல் 1990 களில் வெளிவந்த நாவல்களையும், ஐந்தாம் இயல் 2000 - 2010 ஐ உள்ளடக்கிய காலப்பிரிவிற்குள் வெளிவந்த நாவல்களையும் ஆய்விற்குட்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

ஆறாம் இயல் கிழக்கிலங்கை நாவல்களும் மொழிநடையும் என்ற தலைப்பில் ஆராயப் படுகிறது. இதில் கதை மாந்தர் உரையாடல்கள், சொற்கள், சொற்றொடர்கள், சம்பவ விபரிப்புகளும் வர்ணனைகளும், கதை நகர்த்தும் முறைகள் ஆகியனவும் அவற்றின் அழகியலும் எடுத்துக்காட்டப்பட இறுதி இயலான ஏழாம் இயல் ஆய்வின் தொகுப்பினையும் மதிப்பீட்டையும் கொண்டிருகிறது.